**செய்தி வெளியீடு எண்: 392** **நாள்: 20.06.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.6.2018) தலைமைச் செயலகத்தில், கிராமப்புற ஏழைப் பெண்களின் முன்னேற்றத்திற்காக பணியாற்றி வரும் மதுரை மாவட்டம், பில்லுச்சேரி கிராமத்தை சேர்ந்த களஞ்சியம் பெண்கள் சுய உதவிக் குழு அமைப்பின் தலைவர் திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்களுக்கு 2018–ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதினை வழங்கி சிறப்பித்தார்கள்.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில், ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு அந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ''அவ்வையார் விருது" எனும் உயரிய விருது வழங்கப்படும் என்றும், இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி 2012–ஆம் ஆண்டு முதல் "அவ்வையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 66 வயது நிரம்பிய திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்கள், களஞ்சியம் பெண்கள் சுய உதவிக்குழு அமைப்பின் தலைவராக பொறுப்பேற்று, கடந்த 30 வருடங்களாக கிராமப்புற ஏழைப் பெண்களின் முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருகிறார். களஞ்சியம் இயக்கத்தின் தன்னார்வலர்கள் பொது மக்களுக்கு கல்விக் கடன், விவசாய கடன் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள ஆடு, மாடு வளர்க்க கடன் பெறுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள்.

திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்களின் தன்னலமற்ற கடின உழைப்பினால் மதுரை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கிராமப்புற பெண்கள் சமூக

பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளனர். 2589 சுய உதவிக் குழுக்களை உருவாக்கி கிராமப்புற பெண்களின் வாழ்வை வெற்றிகரமாக மாற்றியது மூலம் சமுதாய மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றியுள்ளார். இதைத் தவிர திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்கள் கிராமப்புற பெண்களின் ஆரோக்கியத்திற்காக இலவச மருத்துவ முகாம்கள், வேளாண்மை சார்ந்த பணிகளில் பெண்களை மேம்படுத்துவதற்காக, இயற்கை முறையில் காய்கறிகளை பயிரிடுதல், மரம் நடுதல் போன்ற பணிகளை ஊக்கப்படுத்தி பெரும் பங்காற்றியுள்ளார். மேலும், திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்களின் மகளிர் மேம்பாட்டுப் பணிகளை பாராட்டி 2000–ஆம் ஆண்டு மத்திய அரசு, ஸ்ரீசக்தி புரஸ்கார் விருது வழங்கியுள்ளது.

கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தன்னலமற்ற சேவை புரிந்து வரும் திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்களை கௌரவிக்கும் பொருட்டு, 2018–ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதுக்கு தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்டார்.

திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அவ்வையார் விருதுக்கான ஒரு லட்சம் ரூபாய் காசோலை, 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களிடமிருந்து அவ்வையார் விருதினை பெற்றுக் கொண்ட திருமதி பெ.சின்னப்பிள்ளை பெருமாள் அவர்கள் தனது சமூக சேவையினை அங்கீகரித்து விருது வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., மற்றும் சமூக நல ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 20.6.2018**